தூத்துக்குடி மாநகராட்சி

கூட்டப்பொருள்

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்

04.11.2020	1) இம்மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட சுந்தரவேல்புரம் மேற்கு சர்வே வார்டு பி, பிளாக் எண்.5 நகரளவை எண் 1/2 B1ல் 2956 சதுர மீட்டர் (73 செண்ட்) பரப்பளவு கொண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு உள்ளூர் திட்டக்குழுமம் கோப்பு எண். ந.க.எண். 1270/2019 தூஉதிகு நாள் 24.02.2020ன் படி தூத்துக்குடி உள்ளூர் திட்ட குழுமத்தில் அங்கீகரிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலை எண். 17.20மீட்டர் அகலம் கொண்ட தென்வடல் சாலை Splay உள்பட 222.156 சதுர மீட்டர் பரப்பளவு சாலை எண்.2 10.00 மீட்டர் அகலம் கொண்ட கிழமேல் சாலை 523.856 சதுர மீட்டர் பரப்பளவு, உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடம் 12 சதுர மீட்டர் பரப்பளவு மற்றும் மின்வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட இடம் (Transformer Yard) 12.2 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மூலை முடுக்குகளுடன் சேர்த்து அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு சாலைகளின் இரு பக்கமும் மழைநீர் வடிகால் மற்றும் 81.86மீட்டர் நீளத்தில் 110mmHDPE பகிர்மான குழாய் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பூங்கா இடம் மின்சாரவாரியத்திற்கான இடம் ஆகியவற்றை சுற்றி கம்பி வேலி (Fencing) அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் மின் விளக்குகள் அமைப்பதற்கு மதிப்பீடு கட்டணம் ரூ. 70,000 மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலை முடுக்குகள் மழைநீர் வடிகால் அமைந்துள்ள சாலைக்கான இடம் மற்றும் உள்ளாட்சி பொது உபயோக பயன்பாட்டிற்கான மனை மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனை மற்றும் பூங்கா இடம் போன்றவற்றை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்வதற்கான தான பத்திரம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் பெயரில் பதிவு செய்ய மனுதாரராகிய திரு. R. கோடிஸ்வரன் அவர்கள் அனுமதி கோரியுள்ளார். எனவே மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலை முடுக்குகள் , மழைநீர் வடிகால் அமைந்துள்ள சாலைக்கான இடம் மற்றும் உள்ளாட்சி பொது உபயோக பயன்பாட்டிற்கான மனை மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனை மற்றும் பூங்கா இடம் போன்றவற்றை மாநகராட்சி ஆணையர் பெயரில் தான பத்திரம் பதிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	180) அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது.

	அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். எப்1/1665/2020/வ.ம.	
	2)இம்மாநகராட்சியில் நடைபெற்று வரும் – சீர்மிகு நகர திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்கு திட்ட மேலாண்மை கலந்தாலோசகர் நியமனம் செய்வதற்கு (Project Management Consultant) 30.09.2020 அன்று திறக்கப்பட்டது. 1) M/s. Saisakthi Global Infra Survey Pvt Ltd. (JV) SC Engineering Consultant Chennai நிறுவனம் 2) M/s. WAPCOS Limited Chennai நிறுவனம் 3) M/s. Ecorys India Pv Ltd (JV) Pollcare Engineering India Pvt. Ltd. New Delhi நிறுவனம் மேற்படி மூன்று நிறுவனத்தின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் M/s. WAPCOS Limited Chennai நிறுவனம் மட்டும் தொழில் நுட்பத் தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண். 314 நாள் 12.10.2020ல் தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒரு நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை திறக்க உரிய அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டு 14.10.2020ஆம் தேதியன்று திறக்கப்பட்டு அதன்படி M/s. WAPCOS Limited Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியின்படி ரூ. 4,73,30,000/– (GST நீங்கலாக) கொடுத்துள்ளார். மேலும் நிறுவனமானது நடைபெற்று கொண்டு வரும் பணிகளினை கருத்தில் கொண்டு தேவைப்படும் தொழில்நுட்ப பணியாளர்களின் தேவையினை மாற்றியமைத்து அதற்கான தொகையாக ரூ 3,59,30,000/– (GST நீங்கலாக) என ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். மேலும் பரிந்துரை செய்யப்பட்ட தொகையானது பட்டியலிடப்பட்ட பணிகளின் மொத்த தொகையில் (271.97 கோடி) 1.32 சதவிகிதம் ஆகும். திட்ட மேலாண்மை கலந்தாலோசகர் (PMC) கோரப்பட்ட பணிகளில் சில பணிகள் ஏற்கனவே ஆரம்பித்து நடைபெற்று வருவதால் நிறுவனத்தின் பரிந்துரையை ஏற்றுக்கொள்ளலாம். மேலும் நிறுவனத்திடம் 15.10.2020 அன்று விலைகுறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டதன் அடிப்படையில் நிறுவனம் 03.11.2020ம் தேதியன்று விலைகுறைப்பு செய்து கடிதம் கொடுத்தள்ளனர். அதன் அடிப்படையில் M/s. WAPCOS Limited Chennai நிறுவனத்தார் விலைகுறைப்புக்குப் பின் கொடுக்கப்பட்ட தொகை ரூ 3.26.36.400.00 (GST நீங்கலாக) அளித்துள்ளனர் மேலும் நிறுவனத்தின் விலை விகிதம் பட்டியலிடப்பட்ட பணிகளின் மொத்த தொகையில் (271.97 கோடி) 1.20 சதவிகிதம் ஆகும். எனவே M/s. WAPCOS Limited Chennai நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று	181) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

	சீர்மிகு நகர திட்ட பணிகளுக்கான திட்ட மேலாண்மை கலந்தோலோசகர் நியமனம் (PMC) செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலகக் குறிப்பு** 1) M/s. WAPCOS Limited Chennai நிறுவனத்தினை திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக நியமனம் (PMC) செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம். File No, E1/3209/2015/(PMC)	
	3) இம்மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களுக்கு 10000 நபர்களுக்கு ஒரு நகர்ப்புற சுகாதார செவிலியர் பணியிடம் என திட்ட இயக்குநர், தேசிய சுகாதார திட்டம், சென்னை அவர்களின் கடிதம் எண். 32247/Urban PHC/A1A2017 நாள் 17.10.2017ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி அனுமதிக்கப்பட்ட மொத்தம் 37 பணியிடங்களில் காலியாக உள்ள 6 பணியிடத்தில் AMK வெளிக்கொணர்வு முறையில் 5 நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் மற்றும் 1 மருந்தாளுநர் பணிபுரிந்து வருகின்றார்கள். மேற்படி பணியாளர்களை நடப்பு நிதியாண்டிற்கும் (2020–2021) வெளிக்கொணர்வு முறையில் பணிபுரிய அனுமதித்தும் மற்றும் மேற்படி பணியாளர்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 11.00 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1/325/18	182) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது .
	4) தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண். 51 உப்பாத்து ஓடை சந்திப்பில் (இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்) துறையினரால் மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. மேற்கண்ட உப்பாத்து ஓடையின் கிழக்கு பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான 200 mm D1 மெயின் மற்றும் மேற்கு பகுதியில் 500 mm D1 மெயின் குழாய் செல்வதால் மேற்படி பணிக்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்படி குடிநீர் பம்பிங் மெயின் குழாயினை அப்புறப்படுத்தி அவ்விடத்திற்கு அருகாமையில் குழாயினை மாற்றி அமைக்கும் பணியினை ரூ. 23.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.	183) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது
வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீடு (இலட்சத்தில்)
1	Disjointing and Transporting and relaying of existing DI pipe of 500mm & 200mm at LHS of NH 138 from Golden weight to VVM warehouse in South zone	23.50

	மொத்தம்	23.50
	எனவே மேற்படி பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 23.50 இலட்சத்தில் குடிநீர் நிதி மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலகக் குறிப்பு** 1) மாமன்றம் அனுமதிக்கலாம் 2) மேற்படி பணிக்கான செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். இ2/01770/2020	
	5) தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல பகுதிக்குட்பட்ட வார்டு எண். 57 பாரதிநகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி மேற்கு பகுதி வகுப்பறை கட்டிடங்கள் மிகவும் பழுதுபட்டு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளபடியால், மாணவ மாணவியரின் பாதுகாப்பு கருதி மேற்படி பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக வகுப்பறைகள் அமைக்க வேண்டியது அவசியமானதாகும். எனவே, மாணவ மாணவியரின் பாதுகாப்பு கருதி மேற்படி பள்ளியில் புதிதாக வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் சோலார் மின்வசதிகள் அமைக்கும் பணியினை ரூ. 42.50 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.	184) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது
வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீடு (இலட்சத்தில்)
	தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 57 பாரதிநகர் பள்ளியின் மேற்கு பகுதியில் பழுதுபட்டுள்ள பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் சோலார் மின் வசதிகள் அமைக்கும் பணி	42.50
	மொத்தம்	42.50
	எனவே மாணவ மாணவியரின் பாதுகாப்பு நலன் கருதி மேற்படி பள்ளியில் புதிதாக வகுப்பறைகள் மற்றும் சோலார் மின்வசதிகள் அமைக்கும் பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 42.50 இலட்சத்தில் கல்வி நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது **அலுவலகக் குறிப்பு** 1. மாமன்றம் அனுமதிக்கலாம் 2. மாநகராட்சி கல்வி நிதியில் மேற்படி பணியை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். இ2/01920/2020	

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 04.11.2020